(2) 1970–71 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் குறித்த பத்திகள் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள (வணிகத் துறைகள் பற்றிய) பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

‘‘ 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்ததல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.’’

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழ்ங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை த் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஆ) பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

‘‘ 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.